# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 140/2024**

Deposition of Witness of PW4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேஷ் | Calling | : | |
| Father/Husband's Name | : | ராமசாமி | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th June 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு கருங்கல்பாளையத்தில் வசித்து கொண்டு ெஹல்பர் வேலை பார்த்து வருகிறேன். 11.08.2022 ம் தேதி நானும், சரண்குமாரும் CCTV பொருத்துவதற்காக பொருட்களை எடுத்துவர எங்களை கௌதம் வரச்சொன்னார். அவர் இருசக்கர வாகனத்தில் முன்னால் செல்ல நாங்கள் பின்னால் சென்றோம். அரச்சலூர் தாண்டி ஒரு இடத்தில் கூட்டமாக இருந்தது. நாங்கள் இறங்கி போய் பார்த்தோம். கௌதம் வண்டி நின்றது. அருகில் அவர்அடிபட்டு கிடந்தார். டிராக்டர் பழுதாகி ரோட்டின் நடுவில் நின்று கொண்டிருந்தது. அந்த இடம் இருட்டாக இருந்தது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ்-க்கு போன் செய்து இருந்தார்கள்.

2. சரண் ஆம்புலன்ஸ்-ல் கௌதம் உடன் சென்றார். நான் இருசக்கர வாகனத்தை எடுத்து பின்னால் சென்றேன். அரசு மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றோம். மருத்துவமனையில் கௌதம் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ சாட்சியாக அறவிக்கப்படுகிறார்)**

11.08.2022 ம் தேதி இரவு 8.30 மணிக்கு ஊஞ்சக்காட்டு தோட்டம் அருகில் ரோட்டின் நடுவில் TN 28 AU 0828 என்ற டிராக்டர் வாகனத்தின் டயர் வெடித்து பழுதாகிய நிலையில் ரோட்டின் நடுவில் பார்க்கிங் லைட் போடாமலும்,எச்சரிக்கை பலகை வைக்காமலும் ஆஜர் எதிரி நிறுத்தி

வைத்திருந்ததாகவும், இருசக்கர வாகனத்தில் வந்த கௌதம்பிரசாத் டிராக்டர் வலதுமுன்பக்க சக்கரத்தில் மோதி விபத்தை ஏற்பட்டதாகவும், நாங்கள் சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அஜாக்கிரதையாக வாகனத்தை ரோட்டில் நிறுத்தியதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், கௌதம்பிரசாத், சரண்குமார் ஆகியோர்கள் நண்பர்கள் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 9.30 மணிக்கு சென்றோம். போலீஸார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 11.00 மணி இருக்கும், ஆனால் சரியாக தெரியவில்லை. போலீஸார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அடுத்த நாள் காலை 8.00 மணிக்கு காவல்நிலையம் வரச்சொன்னார்கள். நானும், சரண்குமாரும் காவல்நிலையம் சென்றோம். வேறு யாரும் வரவில்லை. பிரேத விசாரணையின் போது நாங்கள் அங்கு இருந்தோம். கையெழுத்து எதுவும் போடவில்லை.

2. அரச்சலூர் டூ சென்னிமலை செல்லும் ரோடு பிரிவுக்கு முன்பு விபத்து நடந்ததா, தாண்டியா என்றால் அதுபற்றி தெரியாது. விபத்து நடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும், எனது நண்பருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு தான் டயர் வெடித்தது என்று சொன்னார்கள்.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/– ராஜேஷ்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 140/2024**

Deposition of Witness of PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரண்குமார் | Calling | : | |
| Father/Husband's Name | : | செல்வம் | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th June 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் தற்போது ஈரோடு கருங்கல்பாளையத்தில் வசித்து கொண்டு ஈரோடு மார்க்கெட்டில் சுமை தூக்கும் வேலை பார்த்து வருகிறேன். 11.08.2022 ம் தேதி மாலை 6.00 மணியளவில் கௌதம்பிரசாத் எனக்கு போன் செய்து டூல்ஸ் பாக்ஸ் எடுக்கவேண்டும் எனவே என்னையும், ராஜேஸ் என்பவரையும் அழைத்தார். நாங்களும் சுமார் 7.15 மணிக்கு ஈரோடு மார்க்கெட்டில் இருந்து புறப்பட்டு நானும், ராஜேஷ்-ம் ஒரு பைக்கிலும், எங்களுக்கு முன்னால் கௌதம் பிரசாத் ஒரு பைக்கிலும் சென்று கொண்டிருந்தோம். கௌதம்பிரசாத் அரச்சலூாரை தாண்டி உள்ள ஒரு ஊரில் டிராக்டர் நடுரோட்டில் நின்று கொண்டிருந்தது. டிராக்டரின் முன்பக்க டயரில் மோதிவிட்டார்.

2. நாங்கள் பின்னால் சென்றோம். அங்கு 2,3 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். 108 ஆம்புலன்ஸ்-க்கு போன் செய்தோம். நான் 108 ஆம்புலன்ஸ்-ல் கௌதம்பிரசாத் உடன் சென்றேன். என் பைக்கை ராஜேஷ் எடுத்து கொண்டு வந்தார். டிராக்டர் ரோட்டின் குறுக்கே நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தது. கல் எதுவும் வைக்கவில்லை. இருட்டாகவும் இருந்தது. விபத்து சம்பந்தமாக கௌதம்பிரசாத் பெற்றோருக்கு தகவல் சொன்னேன். டிராக்டரை ஓட்டிவந்த நபர் ஆஜர் எதிரி என்றும், அது டயர் வெடித்ததால் அங்கு நிறுத்தியது அவர் தான் என்பது எனக்கு அப்போது விசாரித்து தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் செல்வதற்கு முன்பு எவ்வளவு நேரத்திற்கு முன்னர் விபத்து நடந்தது என்றால் 5 நிமிடத்திற்கு முன்னால் நடந்தது. ரோடு 40 அடி அகலம் இருக்குமா என்றால் இல்லை, சுமார் 10 அடி அகலம் இருக்கும். விபத்து நடந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 4 நபர்கள் இருந்தார்கள். கௌதம்பிரசாத் வாகனத்திற்கு முன்னால் எந்த வண்டி போனது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். டிராக்டரின் எந்த டயர் வெடித்தது என்றால் சரியாக கவனிக்கவில்லை. நான் CCTV கேமரா பொருத்தும் வேலைக்கு செல்வேனா என்றால் உயரமாக உள்ள இடங்களில் கேமரா பொருத்த நாங்கள் செல்வோம். ஆனால் சுமைதூக்கும் வேலை தான் செய்கிறேன்.

2. அரச்சலூர் டீ சென்னிமலை செல்லும் ரோடு பிரிவுக்கு முன்பு விபத்து நடந்ததா, தாண்டியா என்றால் அதுபற்றி தெரியாது. விபத்து நடந்த இடத்தில் மின்கம்பம் இருந்ததா என்றால் இல்லை. கௌதம்பிரசாத் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. கௌதம்பிரசாத் எப்போது இறந்தார் என்றால் முகத்தில் அடிபட்டு இருந்தது, எப்போது இறந்தார் என்று தெரியவில்லை. போலீஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் இரவு 9.30மணிக்கு விசாரித்தார். என்னை காவல்நிலையம் எப்போது வரச்சொன்னார்கள் என்றால் மறுநாள் காலை 9.00 மணிக்கு வரச்சொன்னார்கள். நான் 7.30 மணிக்கு காவல்நிலையம் சென்றுவிட்டேன்.

3. காவல்நிலையத்திற்கு நானும், ராஜேஷ், கௌதம்பிரசாத்தின் அப்பா மற்றும் நண்பர்கள் 4,5 நபர்கள் சென்றோம். இந்த விபத்து நான் சொல்வது போல் நடக்கவில்லை என்றும்,விபத்து நடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து புகாரிலும், முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு நடக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து கௌதம்பிரசாத் வண்டியில் செல்லும் போன் பேசிக்கொண்டே முன்பு இருந்த வண்டியை கவனிக்காமல் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**ஒம்/– சரண்குமார்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 140/2024**

Deposition of Witness of PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | யோகப்பிரியா | Calling | : | |
| Father/Husband's Name | : | கௌதம்பிரசாத் | Age | : | |
| Village | : | | | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th June 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு சத்தியமங்கலத்தில் வசித்து கொண்டு எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்து போனவர் எனது கணவர் ஆவார். 11.08.2022 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது இரவு 8.30 மணிக்கு எனக்கு சம்பவ இடத்திலிருந்த ஒரு நபர் எனக்கு போன் செய்து எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். நான் அந்த சமயம் 9 மாத கர்ப்பிணியாக இருந்ததால் அன்று இரவு எனது பெற்றோர் எனது கணவர் இறந்துவிட்டதாக என்னிடம் தெரிவித்தார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

நானும் எனது கணவரும் விபத்துக்கு முன்பு காங்கயத்தில் உள்ள என் பெற்றோர் வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது கணவர் ஈரோடு, காங்கயம் ஆகிய இடங்களில் CCTV கேமரா பொருத்தும் வேலை சொந்தமாக செய்து வந்தார். தினமும் வீட்டிற்கு வந்துவிடுவார்.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/- யோகப்பிரியா

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 140/2024**

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Calling | : |
| Father/Husband's Name | : பொன்னுசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th June 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு கருங்கல்பாளையத்தில் வசித்து கொண்டு ஆட்டோ ஓட்டி வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் இரவு 8.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது அரச்சலூர் போலீஸார் எனக்கு போன் செய்து எனது மகன் கௌதம் பிரசாத்–க்கு அரச்சலூர் கண்ணம்மா புரம் அருகில் விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அவரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் சொன்னார்கள். நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் மகனை அவசர சிகிச்சை பிரிவில் வைத்துவிட்டார்கள். என் மகன் இறந்துவிட்டதாக என்னிடம் காலையில் சொன்னார்கள்.

2. மேற்படி என் மகன் அவரது பைக்கில் சென்ற போது கண்ணம்மா புரம் அருகில் டிராக்டரில் டயர் வெடித்து ரோட்டின் குறுக்கே டிராக்டர் இருந்துள்ளது. தடுப்பு எதுவும் வைக்காததாலும், அங்கு வெளிச்சம் இல்லாததால் அந்த டிராக்டரில் எனது மகன் பைக் மோதியதில் எனது மகன் இறந்துவிட்டார். என் மகனுக்கு முகத்தில் அடிபட்டது. என்மகன் இறப்பு சம்பந்தமாக நான் அரச்சலூர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மறுநாள் பிரேத பரிசோதனை முடித்து எனது மகன் பிரேதத்தை என் வசம் ஒப்படைத்தார்கள்.போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் என்னுடன் வந்தவர்கள் எழுதினார்கள். காவல்நிலையத்திற்கு மறுநாள் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 9.00 முதல் 10.00 மணி இருக்கும். முதல் நாள் இரவு 2.00 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீஸார் அப்போது மருத்துவமனைக்கு வரவில்லை. இந்த விபத்து புகாரில் குறிப்பிட்டுள்ளவாறும், முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/– கணேசன்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.